# நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

*(2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரியது)*

இந்த அறிக்கையானது 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை நிதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**01. 2019ஆம் ஆண்டிற்கான பரிந்துரைகள்**

2019ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனங்களின் நிதிப்பகிர்வுகள் சம்பந்தமான, பரிந்துரைகள் மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு 2018 நவம்பர் மாதம் 28ம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்து.

(இது அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தின் 154(J) உறுப்புரைக்கு அமைவானதாகும்)

**02. மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டங்கள் -2018 இல் திருத்தங்கள்**

மாகாணங்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களின் கீழ்வரும் பரந்த செயற்பாட்டு விடயப்பரப்புக்களிலும் மற்றும் விஷேட தேவைகளுடைய கிராமங்களுக்கான கொடையின் கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்திட்டங்களிலும் திருத்தங்கள் செய்வதற்கு கொள்கையளவில் ஒத்திசைவு வழங்கப்பட்டது.

**03. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை - 2017**

2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு 2018 ஆம் ஆண்டு டிசமபர் 5 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**04. நிதி ஆணைக்குழுவின் மூலோபாய திட்ட மீளாய்வும் நடைமுறைப்படுத்தலும்**

நிதி ஆணைக்குழுவின் மூலோபாய திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**05. 2019ஆம் ஆண்டிற்0கான செயல்பாட்டுத் திட்டம்**

2019 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டுத்திட்டம், நிதி ஆணைக்குழுவின் மூலோபாய திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுவதுடன் காலக்கிரமத்தில் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்.

**6. மாகாண கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பில் அறிக்கை தயாரித்தல்**

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் அனுப்பப்ட்ட கிழக்கு, மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களின் கணக்காய்வு அறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டதுடன் நிதி ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மாகாணங்களின் பொறுப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு உரிய மாகாணங்களின் ஆளுனர்களுக்கும், பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கபட்டது.

**07. நிதி ஆணைக்குவிற்கான புதிய கட்டிட நிர்மாணம்**

நிதி ஆணைக்குழுவிற்கான புதிய அலுவலக கட்டிட தொகுதி நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது. இக்கட்டிடத்தின் மொத்த நிர்மாண செலவானது ரூபா 442 மில்லியனாகும். நிதி ஆணைக்கழுவின் அலுவலர்கள் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி புதிய கட்டிடத்திற்கு இடம்மாறியுள்ளார்கள். புதிய கட்டிடமானது விரைவில் மேதகு ஜனாதிபதி அவர்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

**08. நிதி ஆணைக்குழுவின் தரவு தளம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமை.**

நிதி ஆணைக்குழுவின் தரவு தளம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமைக்கு ஆசியா பவுண்டேஷனானது ‘‘தீக்ஷன’’ தரவுத்தள அபிவிருத்தியாளர்களை தெரிவு செய்துள்ளது. அவர்கள் மீண்டெழும் செலவீன நிகழ்வுகளிற்கான தரவு முறைமையை உருவாக்கம் செய்யும்

பணியிலுள்ளனர். மென்பொருள் விபரக்குறிப்பு அவர்களால் அனுப்பிவைக்கப்படடு பரிசீலிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, மாகாண அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழுவானது ''தீக்ஷன'' மற்றும் ஆசிய பவுண்டேஷனுடன் வருவாய்கள் மற்றும் மூலதன அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளது. வருவாய்கள் மற்றும் மூலதன முறைமையையும் தீக்ஷனவுடன் தொடர ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது. இவ்விரு முறைகளுக்கும் மேலாக ஏற்கனவே மீண்டெழும் செலவின முறைமை தீக்ஷனவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றின் கணிணி முன்மாதிரி வடிவம் நிதி ஆணைக்குழுவுக்கு காண்பிக்கப்படும்.

## 09. நிதி ஆணைக்குழுவிற்கான மாதிரி சட்ட வரைபு

நிதி ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் சட்டவரைஞரிடம் அவர்களின் கவனத்னிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய மாதிரி சட்ட வரைபு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ம் திகதி சட்டமா அதிபருக்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 10. கற்கை விஜயம்



மருத்துவ நிர்வாகத்தின் மருத்துவர்கள் 2018ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு நிதி ஆணைக்குழுவின் பங்கு, மற்றும் செயல்பாடுகளை கற்றறிந்து கொண்டனர். பரிந்துரைச் செயல்முறைகள், மாகாணங்களின் திட்டமிடல் மற்றும் பாதீட்டு செயல்முறை, மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள், மாகாண வருமான மூலங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் நிதியிடல், மாகாணங்களின் ஆளணி மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்டன.

## 11. அலுவலர்களின் ஆளுமை திறன் விருத்தி

### 11. 1. பயிற்சி

நிதி ஆணைக்குழவின் சில அலுவலர்களுக்கு கீழ்வரும் தெரிவு செய்யப்பட்ட துறைகளில் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

- தொழில் சட்டம் (அலுவலக மற்றும் கடை சட்டம், பணி ஓய்வு கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி கொடுப்பனவு போன்றவை)
- வாகன ஓட்டுனர்களின் விழிப்புணர்வு திட்டம்

### 11.2. விருந்தினர் விரிவுரைகள்

பின்வரும் விருந்தினர்கள் நிதி ஆணைக்கழுவிற்கு வருகை தந்து நிதி ஆணைக்கழுவின் அலுவலர்களுக்கு விரிவுரைகளை மேற்கொண்டனர்.

| இல | பெயர் | தலைப்பு | திகதி |
|---|---|---|---|
| 01. | டாக்டர். தமரா போகொட | ஆயுர் வேதத்துடன் ஆரோக்கியமான வாழ்க்கை | 2018 ஒக்டோபர், 19 |
| 02. | பேராசிரியர். எஸ். பி பிரேமரத்ன பொருளாதார திணைக்களம் கொழும்பு பல்கலைக் கழகம் | இலங்கையின் தற்போதைய பொருளாதார சிக்கல்கள் | 2018 நவமபர், 29 |
| 03. | பேராசிரியர். தியனாத் சமரசிங்ஹ மனநல கல்விபுகட்டுனர் | பணமும் ஆரோக்கியமும் | 2018 டிசம்பர், 12 |



பேராசிரியர். தியனாத் சமரசிங்ஹ அவர்களின் விரிவுரை



பேராசிரியர். எஸ். பி பிரேமரத்ன அவர்களின் விரிவுரை

**11. 3 அலுவலர்களின் கற்கைகள்**

நிதி ஆணைக்குழுவின் சில அலுவலர்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் சில தொழில் நுட்ப கற்கைகளுக்காக கீழ் வரும் சில முன்வைப்புக்களைச் செய்தனர்.

| பெயர் | தலைப்பு |
|---|---|
| • திரு. எஸ். எம். ஆர். எஸ். பண்டார<br>பணிப்பாளர் | பணத்திற்கான மதிப்பு |
| • திருமதி. எ. ஆர். மரீனா<br>உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | உள்ளூராட்சி மன்றங்கள் |
| • திரு. ஜி. கொடிகார<br>உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | உள்ளூராட்சி மன்றங்களின்<br>வருமானத்தை அதிகரித்தல். |
| • திரு. ஆர். ரனசிங்க<br>உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | இலங்கையின் சுகாதார துறை |
| • திருமதி. நிமாலி ரத்னாயக<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | இலங்கையில் வீடுகள் |



**12. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்கான பாதீட்டுக் கூட்டங்கள்**

நிதி ஆணைக்குழுவில் ஒன்பது மாகாணங்களின் தலைமை செயலாளர்கள் மற்றும் பிரதி பிரதம செயலாளர் (நிதி) ஆகியோருடன் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 5ம் திகதி கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் கலந்து கொண்டார்.

2018 இன் மாகாண பாதீடு, 2019 இற்கான ஒதுக்கீடு என்பவற்றிலான விடயங்கள் பற்றி கலந்துரையாடவும் தேவையான விதப்புரைகளை மேற்கொள்ளவும் பிரதம செயலாளர்களிற்கு வாய்ப்பளிப்பதே இக்கூட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

13. **சமமான பிராந்திய அபிவிருத்தியை அடையும் பொருட்டு உணவு மதிப்பு சங்கிலி அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுததும் பொருட்டு மாகாண உணவு தொழில்நுட்பங்கள் சம்பந்தமான இரண்டு நாட்கள் தேசிய பயிற்சி பட்டறை**



இலங்கை நிதி ஆணைக்குழுவானது சமமான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கில் கொள்கைகளை உருவாக்கி சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை முறையாக குறைக்கும் வகையில் மாகாணசபைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு பரிந்துரை செய்கின்றது.

நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்காகவும் அபிவிருத்திப பங்குதாரர்களின் கருத்தக்களைப் பெறவும், உணவு சங்கிலி தொடர் அபிவிருத்தி முன்யோசனைகளை நடைமுறைப்படுத்த இரண்டு நாள் பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்வதற்கான திட்டத்தினை பிரதான குழு திட்டமிடுகிறது.

இடம்பெறவுள்ள இரு நாள் பயிற்சிப் பட்டறையானது ஜனாதிபதி செயலகம், நிதி ஆணைக்குழு, தேசிய நிறுவன அபிவிருத்தி அதிகார சபை இணைந்து ஆசியா பவுண்டேஷனுடன் கூட்டிணைந்து ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இக்காலாண்டுப் பகுதியில் ஒக்டோபர் 9ம், 19ம், 29ம், மற்றும் நவம்பர் 13 ஆம் திகதிகளில் கூட்டங்கள் நடை பெற்றன. பயிற்சிப் பட்டறையானது 2019இல் நடாத்தப்படும்.

14. **பாதீட்டு ஒதுக்கீடுகள் வழிகாட்டல்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல் சம்பந்தமான கூட்டங்கள்.**



2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவில் சிறப்புக் கூட்டம் ஒன்று பாதீட்டு ஒதுக்கீடுகள் வழிகாட்டல்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக (துறை, கூறுகள், உப கூறுகள்) கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டது. அணைத்து மாகாணங்களினதும் பிரதி தலைமைச் செயலாளர்கள் (திட்டமிடல்) இக் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

15. **சமூக பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் சமமான பிராந்திய அபிவிருத்தியை அளவிடுதல் சம்பந்தமான கலந்துரையாடல்கள்.**



நிதி ஆணைக் குழுவினால் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி புள்ளிவிபர மற்றும் கணக்கெடுப்பு திணைக்களம், மத்திய வங்கி, அரசிறை திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒரு கலந்துரையாடல் நிதி ஆணைக் குழுவில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமானது, மாகாணங்களுக்கு இடையிலான பிராந்திய வேறுபாடுகளின் தன்மையை அடையாளம் காண்பதும், அளவீடுகள் சமர்ப்பித்தல் தொடர்பிலான ஆய்வு செய்வதும் மற்றும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளுடன் தொடர்புடைய சிக்கலான விடயங்களை சமாளிக்கக்கூடிய ஒரு முறைமையினை கண்டுகொள்தலுமாகும்

இக் கலந்துரையாடலின்பிரகாரம் விதிமுறைக் குறிப்பின் (TOR) வரைபு தயாரிக்கப்பட்டு செயல்பாட்டு குழுவுக்கும் வழிகாட்டும் குழுவுக்கும், மற்றும் பற்குபற்றியவர்களுக்கும், அவர்களின்

அவதானிப்புகளிற்கும் கருத்துகளுக்காகவும் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

**16. உள்ளக கணக்காய்வு குழு**

நான்காவது உள்ளக கணக்காய்வு குழு கூட்டம் 2018 டிசம்பர் 11 ஆம் திகதி கணக்காய்வு அத்தியட்சகர் கணக்கீட்டு முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது. இக் கூட்டத்தின் தீர்மானங்கள் நிதி ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் உரிய தொடர் நடவடிக்கைகளிற்காக தெரியப்படுத்தப்பட்டது. உள்ளக கணக்காய்வானது வழமையான ஒழுங்கு முறை அம்சங்களுக்கு மேலாக செயல்திறன் நோக்கிலும் செயல்பட வேண்டும் என ஆணைக்குழு திர்மானித்தது.

உள்ளக கணக்காய்வு சாசனமானது ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வு நிகழச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்படும்.

**17. நிதி ஆணைக்குவுக்கும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்திற்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

நிதி ஆணைக்குழுவானது, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்துடன் இணைந்து ஆய்வு கற்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றது.

இம் முயற்சியின் மூலம் நிதி ஆணைக்குழுவின் அலுவலர்களின் ஆய்வு திறன் விருத்தியையும் கட்டியெழுப்ப எரிர்ப்பார்க்கப்படுகின்றது. இம் முயற்சியை தொடர, 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி ஓர் புரிந்துனர்வு ஒப்பந்தத்தின் வரைபு தயாரிக்கப்பட்டு அதனை மேலும் மேம்படுத்த இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**18. 2019ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கங்கள்**

2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு ஒதுக்கீடுகள் தொடர்பில் மாகாண சபைகள் நிதி ஆணைக்குழுவின் ஆலோசனைகளை வேண்டியிருந்தது.

ஆண்டு தொடக்கத்திற்கு முன்பாக வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினையும் மற்றும் பாதீட்டினையும் இறுதி செய்வதற்காக நிதி ஆணைக்குழு ஒன்பது மாகாணங்களினதும் எதிர்பார்க்கப்படும் கொடை மற்றும் வருமான இலக்குகளையும் வழிகாட்டல்களுடன் தெரிவிக்கும். ஆனால் இவ்வருடம் பாராளுமன்றத்தால் ஒதுக்கீட்டு சட்டமூலம் அனுமதிக்கப்படாததால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

நிதி ஆணைக்குழுவின் முடிவின்படி அணைத்து பிரதம செயலாளர்களுக்கும் அமைச்சரவையால் 2019 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதத்திற்கான கணக்கிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டால் அவர்கள் மீண்டுமும் செலவுகள் முதல் நான்கு மாதத்திற்கும் 2018 ஆம் ஆண்டிற்கான முடிவுறுத்தலுக்கான மூலதன நிதியுடன் சேர்த்து பெற்றுக்கொள்வார்கள்.

**19. நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை.**

2018 ஆம் அண்டின் மூன்றாம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை அரசியலமைப்பு சபைக்கு 2018 ஆம் ஆண்டு நவம்பர் 09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

**20. சிரேஸ்ட ஊழியர்களின் செயல்திறன் மதிப்பீடு.**

ஆணைக்கழுவினால் 2017இல் உள்வாங்கிக் கொள்ளப்பட்ட நல்லாட்சி நெறிமுறைகளின் விதிகளிற்கமைய, தலைமை நிறைவேற்று அதிகாரி (செயலாளர்) மற்றும் ஏனைய சிரேஸ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் (பணிப்பளர் தரம்) செயல்திறன் என்பன ஆணைக்குழுவின் உப குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களின் அறிக்கை நவம்பர் 2018ல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் செயலாற்றுகையை மேலும் மேம்படுத்தும் பொருட்டு சிரேஸ்ட முகாமைத்துவ உத்தியோத்தர்களின் மதிப்பீட்டை காலாண்டு அடிப்படையில் செயல்படுத்த ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

**21. வேலை ஆய்வு**

நிதி ஆணைகுழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், நிதி ஆணைக்குழுவின் கட்டாய தொழிற்பாடுகளை வினைத்திறன், செயல்திறன் ரீதியாக செயற்படுத்துவதற்கு ஊழியர்களிற்கு அவசிய தேவைகளை நிர்ணயிப்பதற்கு வேலை ஆய்வு ஒன்றை நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஆணைக்குழுவினுள் மனித வள மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகளுடன்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையும் தீவிர ஆய்வு செய்வதன் மூலம் நிறுவனத்தின் உறபத்தித்திறனை மேம்படுத்துவதே ஆய்வின் முழு நோக்கமாகும்.

**22. பங்குபற்றல; / கூட்டத்தில் பங்கேற்றல் / கருத்தரங்குகள் / மற்றும் பயிற்சி பட்டறைகள்.**

தலைவர், செயலாளர், மற்றும் நிதி ஆணைக்குழுவின் அலுவலர்கள் பின்வரும் கூட்டங்கள் மற்றும் பயிற்சி பட்டறைகளில் கலந்து கொண்டனர்

- மொறட்டுவ மாநகர சபையின் ஆளணி மதிப்பீடு.
- பாணந்துர நகர சபையின் ஆளணி மதிப்பீடு.
- உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி நடைமுறைக்கான அனுபவப் பகிர்வு உரையாடல்.
- கற்றுக் கொண்ட பாடத்தின் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை சரிபடுத்தல்.
- உள்ளூராட்சி மன்றங்களின் ஆளனி மீயாய்வு.
- மேல்மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் ஆளனி மீளாய்வு.
- பாலின பிரதானப்படுத்லும் பாலின நடவடிக்கைக்கான பாதீடும்
- இலங்கையில் சிறப்பான தொழில் உறவுகளுக்கான தொழிலாளர் சட்டத்தை புரிந்து கொள்ளல்.
- தென்மாகாணத்தில் வேளாண்மை பயிற்றுவிப்பாளர்களின் சிறப்பு தர அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை அதிகரித்தல்.
- தென் மாகாண கைத்தொழில் திணைக்களத்திற்கு புதிய பதவியணியினை நடைமுறைப்பத்தல்.
- இலங்கையில் போசாக்கிற்கான பொது செலவீன மதிப்பாய்வு.
- 21ம் நூற்றாண்டில் போலாந்து - மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கான வாய்ப்புகளும் அச்சுறுத்தலும்.
- ஆசியாவில் மனித உரிமைகள் தொடர்பான சூழ்நிலைகள் - மனித உரிமைகள் ஐ.நா பிரகடனத்தின் 70 வது ஆண்டு விழா.
- ஏன் ஒரு புதிய தெற்காசியாவுக்கு இந்திய, சீன, சிங்கப்பூர் நட்பு தேவை.
- மத்திய வருமான நாடுகளின் நிலைத்து நிற்க கூடிய அபிவிருத்தி
- பிரதம செயலாளர்களின் மாநாடு.

**23. சிறப்பு கற்கைகள்**

நிதி ஆணைக்குழுவின் உதவியுடன் பல சிறப்பு கற்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

- இலங்கையின் சுகாதார துறையில் தனியார் துறையின் பங்களிப்பு.
- 2017ம் ஆண்டில் இலங்கையின் கல்வி துறையில் தனியார் துறையின் பங்களிப்பு.
- நிரல் அமைச்சுக்களினால் மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பாதீட்டு ஒதுக்கங்கள்.
- மாகாண சபைகள், மாகாண அதிகார சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் சம்பந்தமான கற்கை.

**24. நிதி ஆணைக்குழுவின் நிதிப் பெறுபேறுகள் / செயல்திறன்கள்**

நிதி ஆணைக்குழு மாதா மாதம் நிதி ஆணைக்குழுவின் பெறுபேற்றினை மீளாய்வு செய்தது.

**25. ஆணைக்குழவின் இணக்க அறிக்கை.**

நிதி ஆணைக்குழு அதன் நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து இணக்கங்களும் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. இது சம்பந்தமான இணக்க அறிக்கைகள் மாத அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**26. நிதி ஆணைக்குழுவின் கணக்காய்வு அறிக்கை.**

2018 ஆம் அண்டு நவம்பர் 27 ஆம் திகதி ஆணைக்கழுவின் கணக்காய்வு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி அதற்கான பதில்கள் கணக்காய்வாளர் நாயகம் திணைக்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**27. துறைகள் சார்பான அறிக்கை**

மாகாணங்களுக்கான நிதி ஆணைக்குழுவின் குறித்து ஒதுக்கப்பட்ட கொடையானது துறைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இதன் காரணமாக ஆணைக்குழு கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம் மற்றும் சமூக சேவைகள் போன்ற துறைகளில் கற்கைகளை மேற்கொண்டது. இது மேதகு ஜனாதிபதியின் பரிந்துறைகளிலும், நிதி ஒதுக்கீடுகளிலும் பயன்படுத்தப்பட்டன.

**28. பிராந்திய அபிவிருத்தியில் ஊடகங்களின் பயன்பாடு**

நிதி ஆணைக்குழு தினசரி தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் அறிக்கைகளை கவனத்தில் கொள்கிறது. இதற்கு மேலதிகமாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்துடன் ஓர் ஆரம்ப கலந்துரையடலை மேற்கொண்டுள்ளது. இச் சேவை மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான பிரச்சினைகளையும் தினசரி வழக்கில் அடையாளம் காண்கிறது.

இதற்கு மேலதிகமாக டெய்லி நியுஸ் பேப்பர்கள் மற்றும் ஹன்சாட்டில் பிரசுரிக்கப்படும் பாராளுமன்ற விவாதங்கள் என்பனவும் பின்பற்றப்பட்டுள்ளனது.

**29. 2015 ஆம் அண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை.**

அண்மைய கடந்த காலங்களில் சுயாதீன குழுக்களுக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்களை ஆணைக்குழு கருத்திற் கொண்டது. இதன்படி ஆணைக்குழுவானது கடந்த மூன்று ஆண்டுகளின் செயலாற்று அறிக்கையை ஊடகங்களில் வெளியிட தீர்மானித்தது.

இச்செய்தியானது சிலோன் டெய்லி நியுஸ், பைனான்ஸியல் டைம்ஸ் மற்றும் சண்டே ஒப்சவரில் பிரசுரிக்கப்பட்டது.

**30. ஆணைக்குழு கூட்டங்கள் / உப குழு கூட்டங்கள / அலுவலர்கள் கூட்டங்கள்.**

- கீழ்வரும் திகதிகளில் பின்வரும் நான்கு ஆணைக்குழு கூட்டங்கள் நடைபெற்றன.

  01.10.2018, 25.10.2018, 08.11.2018, 05.12.2018

- ஒழுங்கு முறையாக ஒவ்வொரு ஆணைக்குழ கூட்டத்திற்கும் முன்னதாக ஆணைக்குவின் உப குழுக்கள் சந்தித்தன.

- பிரதான அலுவலர் குழு கூட்டங்கள்- வாராவாரம் தொடர்ச்சியாக நடைபெற்றது.

- அலுவலர்களின் கூட்டங்கள்- 03.10.2018, 27.11.2018, 31.12.2018